Embassy of the United States of America

Colombo

# Media Statement

Public Affairs Section

Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070

Email: ShenJY@state.gov ● http://srilanka.usembassy.gov

Release No. 20160310 T

## **சியம் மகா நிகாயவின் அஸ்கிரிய மகாநாயக்க தேரரின் இழப்பு - அமெரிக்க தூதுவரின் ஆழ்ந்த அனுதாபங்கள்**

சியம் மகா நிகாயவின் அஸ்கிரிய மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய கலகம ஸ்ரீ அத்ததஸ்ஸி தேரர் இயற்கை எய்தியமை தொடர்பில் அரசாங்கத்திற்கும், இலங்கை மக்களுக்கும் அமெரிக்க மக்கள் சார்பில் நான் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றேன். சமாதானத்திற்கும், நல்லிணக்கத்திற்குமான அவருடைய பரிந்துரை மற்றும் தாம் போதித்து வந்த கௌதம புத்தரின் போதனைகளின் ஊடாக அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான மகாநாயக்க தேரர் அவர்களின் அயராத முயற்சிகளை அறிந்திருந்த இலங்கையர்களும், அமெரிக்கர்களும் அவர் மீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தனர்.

###